# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 56/2017**

பெயர்: **சதீஷ்வரன்** நாள்: 06.02.2024

வா.சா.2 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.2 – சதீஷ்வரன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.22</u>

நான் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அசல் வழக்கை மணி, தர்மராஜ் மற்றும் சிதம்பரம் ஆகியோர்கள் ரத்தினம், ராஜாமணி மற்றும் சக்திவேல், சேகர் ஆகியோர்கள்மீது தாக்கல் செய்துள்ளார்கள். வீட்டு இடத்திற்கும், வண்டிப்பாதைக்கும் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியாது. நான் 2 ம் வாதி தர்மராஜுன் வீட்டிற்கு மேற்கே குடியிருந்து வருகிறேன். எனக்கு 2 ம் வாதி தர்மராஜ் பங்காளி உறவுமுறை ஆவார். பிரதிவாதிகளும் எனக்கு பங்காளி முறை ஆவார்கள். முன்னோர்கள் ஒரு தாய் வழி மக்கள் என்ற முறையில் உறவுமுறை ஆவார்கள். நான் 4 ம் தலைமுறை வழி வந்தவர் ஆவேன். எனது தாத்தா பெயர் சுப்ரமணி ஆகும். எனது தகப்பனாருக்கு 2 மனைவிகள் உள்ளார்கள். நான் 2 ம் மனைவியின் மகன் ஆவேன்.

2) நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். என்னுடைய முன்னோர்கள் 1942 ம் ஆண்டே சொத்துக்களை பிரித்துக்கொண்ட விபரத்தினை தெரிந்து கொண்டேன். அதன்படி அனுபவம் செய்து வருகிறார்கள். 1942 ம் ஆண்டில் ஏற்பட்ட பாகப்பிரிவினையின்படிதான் சர்வே எண் 194/3 ல் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால், சரிதான். சர்வே எண் தெரியாது. எனக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கான சர்வே எண் தெரியாது. எனது சொத்திற்கு சம்பந்தப்பட்ட சர்வே எண் தெரியாது என்றாலும், வாதிகள் அழைத்ததால் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரிதான். நான் முதன்மை சாட்சியத்தில் சர்வே

எண் 194/5 ல் கிணறு உள்ளதாக கூறியுள்ளேனா என்றால், எனக்கு சர்வே எண் தெரியாது. கிணறு மட்டும் உள்ளது தெரியும். முதன்மை சாட்சியத்தில் 194/5 ல் கிணறு உள்ளதாக கூறியுள்ளேனா என்றால், உத்தி, வாரி, வாய்க்கால் உள்ளதாகவும், அதற்கு பக்கத்து சர்வே எண்ணில் கிணறு உள்ளதாக கூறியுள்ளேன். நானும் வாதிகளும் ஒரு வம்சாவழியை சார்ந்தவர்கள் என்றாலும், அதனால் பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 11.37

ஒப்பம்/சதீஷ்வரன்

ஒப்பம்/ திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.